# கணிதம்

## பகுதி - 2

## வகுப்பு II

MATHEMATICS
PART - 2
STD II
Tamil Medium

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
(SCERT) கேரளம்

2025

## தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

**II**

# கணிதம்

*Prepared by*

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition - 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

அன்புள்ள குழந்தைகளே,

கணித கற்றலைச் சுவையுடையதாகக்
கற்க பல்வேறு செயல்வரிசைகளில்
இரண்டாம் வகுப்பு கணித பாடப்புத்தகம்
உங்களுக்காகத் தயார் செய்யப்பட்டுள்ளது.
இதிலுள்ள செயல்பாடுகளை ரசித்து
முழுமையாக்க உங்களால் இயலும். அதன் மூலம் புதிய
அறிவை உருவாக்க முடியும்.
கணிதப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான
பல்வேறு செய்முறைகளைத் தெரிந்துகொண்டு
அறிவின் உயர்நிலையை அடைய
இப்புத்தகம் உங்களுக்கு உதவும்
என நம்புகிறேன்.

அன்புடன்,

**முனைவர் ஜெயபிரகாஷ் ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி., கேரளம்.

# Textbook Development Team

**Advisor**

**Dr. E. Krishnan**
Head (Rtd.) Department of Mathematics,
University College, Thiruvananthapuram

**Chairperson**

**Dr. Narayananunni M.P.**
Senior Lecturer (Rtd.), DIET Malappuram

**Experts**

**Dr. Jayadevan S.K.**
Senior Lecturer,
DIET Kannur

**K.R. Muraleedharan Pillai**
Senior Lecturer (Rtd.),
DIET, Kollam

**T. Suresh**
Senior Lecturer (Rtd.),
DIET, Kasaragod

**Dr. Ramesh Kumar P.**
Professor & Head (Rtd.)
University of Kerala, Thiruvananthapuram

**Members**

**K.K. Sureshbabu**
Teacher (Rtd.),
Palayad Central JB School,
Palayad, Kannur

**Sajeevan C.V.**
LPSA, ALPS Kariyil,
Cheruvathoor,
Kasaragod

**Soudamini K.V.**
HM (Rtd.), GLPS Maithani,
Cheruvathoor,
Kasaragod

**Kunjabdulla M.**
HM (Rtd.), Muyippoth MUPS,
Kozhikode

**Beena Stephen**
LPSA, SPTPM GLPS
Kuravankonam, TVPM

**K.G. Thulaseedharan Pillai**
HM (Rtd.), GLPS Anchal,
Kollam

**Anurenj C.E**
LPST GLPS, Velloorkonam,
Thiruvananthapuram

**Muhammed Basheer**
LPST, Sethusitaram ALPS Elathur,
Kozhikode

**Niyas S.**
LPSA, Govt. JB School,
Punnapra, Alappuzha

**Shaju Neravath, Deepu Mohan, Ratheesh Kasaragod, Devika S.D Chirayinkeezh**

## Tamil Version

**Expert**

**Dr. Rajendran S.**
Associate Professor in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

**Members**

**C. Manivannan**
P.D Teacher (Rtd.)
Govt. Tamil LPS Chalai, Thairvananthapruam.

**Babu. S**
Headmaster (Rtd.)
Govt. LPS, Devikulam, Idukki.

**Russelraj. R.**
HM (Rtd.)
ALPS Pullivasal, Munnar, Idukki.

**John Elkaiah**
UPSA (Rtd.)
Govt. SS LPS Karamana, Thiruvananthapuram.

**Acadamic Co-ordinator**

**Dr. Meena S.**
Assistant Professor, SCERT.

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012



# உள்ளடக்கம்




| | | | |
|---|---|---|---|
| 6 | வனவிழா |  | 96 |
| 7 | நண்பர்கள் கூட்டம் |  | 112 |
| 8 | அளந்து பார்ப்போம் |  | 130 |
| 9 | நாட்காட்டி விளையாட்டு |  | 142 |
| 10 | சிறந்த தொடர்புகள் |  | 154 |
| 11 | எண்ணி... எண்ணி... கட்டத்தில் ஆக்குவோம் |  | 166 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

நான்....................................................................................................

..........................................................வகுப்பில் படிக்கிறேன்.

என் அம்மா :

என் அப்பா :

என் ஆசிரியை :

எனது பள்ளிக்கூடம் :

கைப்பேசி எண் :

எனது ஆதார் எண் :


வணக்கம்

6

# வனவிழா




அன்பர்களே...
சர்க்கஸ்... மரணக்கிணறு...
மயிர்க்கூச்செறியும் காட்சிகள்...
வியாபாரச்சந்தைகள்...
கலை நிகழ்ச்சிகள்...
பல்வேறு போட்டிகள்
வாருங்கள்... காணுங்கள்...
கண்டு களியுங்கள்.

# மயிலின் நடனம்

இன்று மயிலின் நடனம் நடைபெறும். மயிலின் படத்தை பாருங்கள். வண்ணம் தீட்டி அழகுபடுத்துங்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ளவையின் விடை வரும் கட்டங்களில் மட்டும் வண்ணம் தீட்டுங்கள். கட்டங்களின் வண்ணமே விடைக்கும் கொடுக்க வேண்டும். வெள்ளை நிறத்தில் உள்ளவையின் விடைகளுக்கு வண்ணம் கொடுக்க வேண்டாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 - 12 | 12 - 10 | 19 - 10 | 10 - 5 | 20 - 10 | 3 - 2 |
| 19 - 11 | 19 -12 | 12 - 1 | 8 - 2 | 8 - 4 | 15 - 3 |



## மேடை நிகழ்ச்சி

நடன நிகழ்ச்சியை காண எல்லோரும் வந்தனர்.




அப்பா குரங்கும் குட்டிக் குரங்கும் சேர்ந்து வந்தனர். இரண்டு பேருக்கும் டிக்கெட் வாங்கினர். ஒரு 20 ரூபாய் நோட்டு கொடுத்தால், மீதி எத்தனை ரூபாய் கிடைக்கும்?

| | | |
|---|---|---|
| அப்பா குரங்கு | 8 | ரூபாய் |
| குட்டிக் குரங்கு | 6 | ரூபாய் |
| மொத்தம் | | ரூபாய் |

## மீதி கணக்கிட

20 இல் இருந்து 14 கழிக்க வேண்டும்.
20 − 14

20 இல் இருந்து 10 கழித்தால் 10.

10 இல் இருந்து 4 கழித்தால் 6

20 − 14 = 6

|  |  |  |  |  |
|---|---|---|---|---|
| 20 | − 10 | = | 10 |
| 10 | − | 4 | = | 6 |
| 20 | − 14 | = | 6 |

**இது போலவும் கண்டு பிடிக்கலாம்**

10 +10 -
10 + 4
0 + 6 = 6

**20 = 10 + 10**
**14 = 7 + 7**

10–இல் இருந்து 7 கழித்தால் 3.
அடுத்த 10 இல் இருந்து 7 கழித்தால் 3

**20 − 14 = 3 + 3**
**= 6**



## பறக்கும் போட்டி

மேகமலையில் பறக்கும் போட்டி.

போட்டிக்கு 20 பருந்துகள் உள்ளன.

இம்முறை பரிசு வாங்க வேண்டும்



சக்கி பருந்தின் சிறகு ஒடிந்து விட்டது. போட்டியில் கலந்துகொள்ள வில்லை

அப்போது மீதி உள்ள 19 பருந்துகள் கலந்து கொள்ளும்





இன்று பறக்கும் போட்டி.
காகங்கள் குடும்பத்தோடு
வந்தன. 29 பேர் வந்தனர்.



காகங்களா
பருந்தா கூடுதல்?

எத்தனை கூடுதல்?

29 இல் இருந்து 19 கழிக்க வேண்டும்.

29 - 19
29 இல் இருந்து 9 கழித்தால் 20
20 இல் இருந்து 10 கழித்தால் 10

29 − 9 = 20
20 − 10 = 10

இதுபோன்றும்
எழுதலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | + | 9 | − | |
| 10 | + | 9 | | |
| 10 | + | 0 | = | 10 |

காகங்கள் இரண்டு மரக்கிளையில் உட்கார்ந்திருந்தன. குரங்கு எண்ணிப் பார்த்தது. முதல் மரக்கிளையில் 18 பேர் உள்ளனர்.

எனில் இரண்டாவது மரக்கிளையில் எத்தனை பேர் உள்ளனர்? ☐

29 இல் இருந்து 18 கழிக்க வேண்டும். 29 - 18

29 இல் இருந்து 10 கழித்தால் 19.
19 இல் இருந்து 8 கழித்தால் 11

29 − 10 = 19
19 − 8 = 11

29 − 18
20 − 10 = 10
9 − 8 = 1
29 − 18 = 11

**இதுபோன்றும் எழுதலாம்.**

20 + 9 −
10 + 8
10 + 1 = 11




இரண்டாவது மரக்கிளையில் உள்ளதைவிட எத்தனை காகங்கள் முதலாவது மரக்கிளையில் கூடுதலாக உள்ளன? ☐

கூடுதல் எத்தனை என கணக்கிட 18 இல் இருந்து 11 கழிக்க வேண்டும்.

நான் கணக்கிட்டது
18 இல் இருந்து 10 கழித்தால் 8.
8 இல் இருந்து 1 கழித்தால் 7

தோழி செய்தது.
18 இல் இருந்து 8 கழித்தால் 10.
10 இல் இருந்து 3 கழித்தால் 7

**வேறொரு முறை**

10 + 8 −
10 + 1
0 + 7 = 7

போட்டியில் கலந்துகொள்ள கிளிகளும் வந்தன.
கீழேயுள்ள கிளையில் 7 பேர் அமர்ந்தனர்.
மீதியுள்ளவர்கள் மேலேயுள்ள கிளையில்.

மேலே உள்ள கிளையிலிருந்து ஒருவர் கீழே வந்தால் இரண்டு கிளையிலும் ஒரே எண்ணிக்கை ஆகும்.



அப்படியென்றால் மேலேயுள்ள கிளையில் கிளிகள் எத்தனை உள்ளன? ☐

மொத்த கிளிகள் எத்தனை? ☐

கிளிகளை விட காகங்கள் எத்தனை கூடுதல்? ☐

**எவ்வாறு கணக்கிட்டீர்கள்?**

## குருவிகள்

போட்டியில் கலந்துகொள்ள குருவிகளும் வந்தன.
மொத்தம் 35 குருவிகள். அவை 3 கிளைகளில் அமர்ந்தன.
முதல் கிளையில் 15 குருவிகள்.
இரண்டாவது கிளையில் முதலாவது கிளையைவிட 6 குருவிகள் குறைவு. மூன்றாவது கிளையில் எத்தனை குருவிகள்?

முதல் கிளையில் 15

இரண்டாவது கிளையில் 15 − 6 = ☐

இரண்டு கிளையிலும் சேர்த்து மொத்தம்? | ... + ... | = | ☐

மூன்றாவது கிளையிலும் சேர்த்து மொத்தம்? | 35

மூன்றாவது கிளையில் உள்ளவர்கள் | 35 − .... | = | ☐

நீங்கள் கண்டுபிடித்தது சரியா? பரிசோதிப்பது எவ்வாறு?

நான் கணக்கிட்டது?

காகங்களைவிட குருவிகள் எத்தனை கூடுதல்?



எங்கள் எண்ணிக்கை 35



29 பேர் எங்கள் கூட்டத்தில் உள்ளனர்.



குருவிகளின் எண்ணிக்கையில் இருந்து காகங்களின் எண்ணிக்கையைக் கழிக்க வேண்டும்.



35 இல் இருந்து 25 கழித்தால் 10.
10 இல் இருந்து 4 கழித்தால் 6.

**35 − 25 = 10**
**10 − 4 = 6**
**35 − 29 = 6**

35 − 29

$$\begin{array}{r} 30 + 5 \; - \\ 20 + 9 \\ \hline \end{array}$$

35 ஐ 20 + 15 என எழுதலாம்

$$\begin{array}{r} 20 + 15 \; - \\ 20 + 9 \\ \hline 0 + 6 \end{array}$$

29 உடன் எத்தனை
கூட்டினால்
35 கிடைக்கும் என
கண்டுபிடித்தாலும்
போதுமல்லவா?

$29 + 1 = 30$

$30 + 5 = 35$

$1 + 5 = 6$



குருவிகள், கிளிகள் இவற்றின் எண்ணிக்கையில் வித்தியாசம் எவ்வளவு?

குருவிகளின் எண்ணிக்கை 35. இதில் இருந்து கிளிகளின் எண்ணிக்கையைக் கழிக்க வேண்டும்.

35 − 16

| | | | |
|---|---|---|---|
| 30 | + | 5 | − |
| 10 | + | 6 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | + | 15 | − | | |
| 10 | + | 6 | | | |
| 10 | + | 9 | = | 19 | |

15 இல் இருந்து
6 கழித்தால்
$15 - 5 = 10$
$10 - 1 = 9$

குருவிகளை விட பருந்துகள் எத்தனை குறைவு?

$35 - 19 = \square$

நான் கணக்கிட்டது?

குருவிகள்
35 உம் நாங்கள்
19 உம்
அல்லவா?



இதுபோன்றும் கணக்கிடலாம்.

**35 - 19**

35 இல் இருந்து 20
கழித்து 1 கூட்டியது

$35 - 20 = 15$

$15 + 1 = 16$

## இறுதிப்போட்டி



இறுதிப் போட்டி காண **42** பறவைகள் வந்தன.

அவை 4 மரக்கிளைகளில் அமர்ந்தன.

ஒன்றாவது மரக்கிளையில் 10 பேர்
இரண்டாவது மரக்கிளையில் 9 பேர்
மூன்றாவது மரக்கிளையில் 10 பேர்
மீதியுள்ளவை நான்காவது மரக்கிளையில்

நான்காவது மரக்கிளையில் எத்தனை பறவைகள்? [ ]

42 இல் இருந்து 30 கழித்தால் 12 அல்லவா?
அப்போது 42 இல் இருந்து 29 கழித்தால் 13.

## இதுபோன்றும் கணக்கிடலாம்

42 - 29 = 30 + 12 −
20 + 9
10 + 3 = 13

வேறு ஏதாவது வழி உள்ளதா?

## அம்பு எறியும் விளையாட்டு

அம்பு எறிந்து விளையாட எல்லோரும் வந்துவிட்டார்கள்? மான், குரங்கு, மயில் ...




ஒரு நபருக்கு இரண்டு அம்புகள் எறியலாம். கிடைத்த எண்களுக் கிடையே உள்ள வித்தியாசம் வெளிகட்டத்திலுள்ள எண் என்றால் **50** ரூபாய் பரிசு

எனக்கு 60 உம் 28 உம் கிடைத்தன.



நரிக்கு பரிசு கிடைக்குமா?

**நான் கணக்கிட்டது.**

இவர்களில் பரிசு யாருக்கெல்லாம் கிடைத்தது?

| | | |
|---|---|---|
| மான் | 60 | 20 |
| குரங்கு | 28 | 16 |
| மயில் | 50 | 36 |
| கரடி | 36 | 28 |

**நான் கணக்கிட்டது.**

## பழக்கடை



குரங்கு 40 ரூபாய்க்கு வாழைப்பழமும் 45 ரூபாய்க்கு மாம்பழமும் வாங்கியது. இரண்டு 50 ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்தது.

மீதி எத்தனை ரூபாய் கிடைக்கும்? ☐

கண்டுபிடித்த முறையைச் சொல்லுங்கள்

வேறு ஏதாவது முறையில் கணக்கிட முடியுமா?

யானை அண்ணன் ஓலையும் கரும்பும் வாங்கியது. இரண்டும் சேர்ந்து 90 ரூபாயானது. கரும்பின் விலை 62 ரூபாய்.

ஓலை எத்தனை ரூபாய்? ☐

எவ்வாறு கணக்கிட்டீர்கள்? வகுப்பில் கூறுங்கள். எழுதுங்கள்.

## சர்க்கஸ்

சர்க்கஸ் நான்கு மணிக்கு ஆரம்பிக்கும்.



7 குரங்குகள் சர்க்கஸ் பார்க்க வந்தன.

நாற்காலிக்கு 20 ரூபாயும் கேலரிக்கு 10 ரூபாயும் ஆகும்.

எல்லோருக்கும் நாற்காலி டிக்கெட் எடுக்க கேலரி டிக்கெட்டைவிட எத்தனை ரூபாய் கூடுதல் கொடுக்க வேண்டும்?

தனித்தனியாக கணக்கிடாமலும் கண்டு பிடிக்கலாம் அல்லவா?



எவ்வாறு கணக்கிட்டீர்கள்?

## முயல்கள் எத்தனை?

வனவிழாவில் கலந்து கொள்ள முயல்களும் வந்தன.
மொத்தம் 85 முயல்கள்.
அதில் 23 பேர் குட்டி முயல்களாகும்.

பெரிய முயல்கள் எத்தனை?

மொத்த முயல்களில் 38 பெண் முயல்களாகும்.

ஆண் முயல்கள் எத்தனை?

## நாவல்பழம்

நாவல்பழம் கூடையில் நிறைக்கும் போட்டியின் இறுதிப் போட்டியில் மூன்றுபேர் போட்டியிட்டனர். ஒவ்வொருவரும் கூடையில் நிறைத்த நாவல் பழங்களின் எண்ணிக்கையை பாருங்கள்...

ஒவ்வொருவரும் மூன்றாவது தடவை பெட்டியில் நிறைத்த எண்ணிக்கையைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

| பெயர் | மொத்தம் | முதல் தடவை | இரண்டாவது தடவை | மூன்றாவது தடவை |
|---|---|---|---|---|
| ஜிம்பு குரங்கு | 89 | 22 | 27 | |
| மிட்டு முயல் | 72 | 24 | 29 | |
| செம்பன் அணில் | 90 | 23 | 28 | |





# 7

# நண்பர்கள் கூட்டம்

## ஆரஞ்சு விநியோகம்



இன்று ஆசிரியை சில ஆரஞ்சுப் பழங்களுடன் வகுப்பிற்கு வந்தார்.
ஒரு பக்க பெஞ்சில் அமர்ந்திருந்த 5 குழந்தைகளுக்கு
2 ஆரஞ்சுப் பழங்கள் வீதம் கொடுத்தார்.
மொத்தம் எத்தனை ஆரஞ்சுப் பழங்கள் கொடுத்தார்?

$2 + 2 + 2 + 2 + 2 = 10$

மறுபக்கம் பெஞ்சில் அமர்ந்திருந்த
4 குழந்தைகளுக்கும் 2 ஆரஞ்சுப் பழங்கள் வீதம் கொடுத்தார்.
மொத்தம் எத்தனை ஆரஞ்சுப் பழங்கள் கொடுத்தார்?

$2 + 2 + 2 + 2 = 8$

இரு பக்க பெஞ்சிலுள்ள
குழந்தைகளுக்கு மொத்தம் எத்தனை ஆரஞ்சுப் பழங்கள் கொடுத்தார்?

$$2 + 2 + 2 + 2 + 2 + 2 + 2 + 2 + 2 = 18$$

**ஒரு பக்க பெஞ்சிலுள்ள ஐந்து குழந்தைகளுக்குக் கொடுத்தது.**

$$2 + 2 + 2 + 2 + 2 = 10$$

2 வீதமுள்ள 5 குழுக்கள்.
5 தடவை 2.
இதனை $5 \times 2$ என எழுதலாம்.

**5 தடவை 2**

$$5 \times 2 = 10$$

**மறு பக்க பெஞ்சிலுள்ள நான்கு குழந்தைகளுக்குக் கொடுத்தது.**

$$2 + 2 + 2 + 2 = 8$$

2 வீதமுள்ள 4 குழுக்கள்.
4 தடவை 2.
இதனை $4 \times 2$ என எழுதலாம்.

**4 தடவை 2**

$$4 \times 2 = 8$$

**மொத்தம் கொடுத்தது.**

$$2 + 2 + 2 + 2 + 2 + 2 + 2 + 2 + 2 = 18$$

2 வீதமுள்ள 9 குழுக்கள்.
9 தடவை 2.
இதனை $9 \times 2$ என எழுதலாம்.

**9 தடவை 2**

$$9 \times 2 = 18$$



சில ஆரஞ்சுகளையும்
ஆசிரியை மேசையின்மேல்
குழுக்களாக வைத்தார்.
அனு குழுக்களை எண்ணினான்.

எத்தனை குழுக்கள்? **6**

ஒவ்வொரு குழுவிலும் எத்தனை வீதம் உள்ளன? **2**

மொத்தம் எத்தனை? **6 தடவை 2 = $6 \times 2 = 12$**



மீதி உள்ள 7 ஆண் குழந்தைகளுக்கும் 8 பெண் குழந்தைகளுக்கும் 2 ஆரஞ்சுப் பழம் வீதம் கொடுத்தார்.

ஆண் குழந்தைகளுக்கு மொத்தம் கொடுத்தது? **$7 \times 2 = 14$**

பெண் குழந்தைகளுக்கு மொத்தம் கொடுத்தது? **$8 \times 2 = 16$**

## பரிசு வழங்குதல்

ஆசிரியை அனைவருக்கும் கொடுப்பதற்காக பரிசுகள் கொண்டுவந்துள்ளார்.



ஒவ்வொரு பெட்டியிலும் 2 கப் வீதம் உள்ளன.
நிமா எண்ணிபார்த்தாள் 10 பெட்டிகள் உள்ளன.

10 பெட்டிகளிலும் சேர்த்து மொத்தம் எத்தனை கப்புகள் இருக்கும்?
10 தடவை 2 கூட்டினால்.

$2 + 2 + 2 + 2 + 2 + 2 + 2 + 2 + 2 + 2$

$10 \times 2 =$ ..........



3 பெட்டிகளில் 2 கப்புகள் வீதம்.

3 தடவை $2 = 3 \times 2 =$ .......



2 பெட்டிகளில் 2 கப்புகள் வீதம்.

2 தடவை $2 =$ ....... $\times$ ....... $=$ .......



1 பெட்டியில் 2 கப்புகள் வீதம்.

1 தடவை $2 =$ ....... $\times 2 =$ .......

முதலில் உள்ளது போன்று நிரப்புங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 3 தடவை 2 | $2 + 2 + 2$ | $3 \times 2$ | = | 6 |
| 4 தடவை 2 | ............... | ............ | = | ...... |
| 6 தடவை 2 | ............... | ............ | = | ...... |
| 2 தடவை 2 | ............... | ............ | = | ...... |

இவற்றை விளக்குங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| $8 \times 2$ | = | 2+2+2+2+2+2+2+2 | 8 தடவை 2 | = | 16 |
| $7 \times 2$ | = | ............................... | ........................ | = | ...... |
| $9 \times 2$ | = | ............................... | ........................ | = | ...... |
| $5 \times 2$ | = | ............................... | ........................ | = | ...... |
| $10 \times 2$ | = | ............................... | ........................ | = | ...... |

## நாணய விளையாட்டு

ஆசிரியை நாணய விளையாட்டு விளையாடுவதற்காக அனைவருக்கும் 2 ரூபாய் நாணயங்கள் கொடுத்தார். ஒவ்வொருவருக்கும் கிடைத்த நாணயங்களின் எண்ணிக்கையை அட்டவணையில் பாருங்கள்.

ஒவ்வொருவருக்கும் கிடைத்தது எத்தனை ரூபாய் எனக் கணக்கிட்டு எழுதுங்கள்.

| பெயர் | 2 ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை | மொத்த ரூபாய் |
|---|---|---|
| ஆதி | 6 | $6 \times 2 = 12$ ரூபாய் |
| ஸ்ரீனு | 3 | |
| அனு | 8 | |
| சாயா | 5 | |
| இவான் | 4 | |

## சைக்கிள் பாடல்

குழந்தைகள் சக்கரங்களை எண்ணத் தொடங்கினர்.

சைக்கிள் ஒன்று, சக்கரம் இரண்டு
சைக்கிள் இரண்டு, சக்கரம் நான்கு
சைக்கிள் மூன்று, சக்கரம் ஆறு
சைக்கிள் நான்கு, சக்கரம் எட்டு
சைக்கிள் ஐந்து, சக்கரம் பத்து
..........................................................
..........................................................
..........................................................



## பந்து விளையாட்டு




குழுக்கள் ஆக்கலாம் விளையாட்டு தொடங்கியது.

ஒவ்வொரு குழுவும் அவர்களுக்கு கிடைத்த பந்துகளை ஆசிரியை கூறும் எண்ணிக்கை வீதமுள்ள குழுக்களாக வைக்க வேண்டும்.

ஆசிரியை. “5 எனக் கூறினார்”

முதல் குழுவிலுள்ள குழந்தைகள் குழுக்களாக பந்துகளை வைத்திருப்பதை பாருங்கள்.



முதல் குழு எத்தனை குழுக்கள் வைத்தனர்? ☐ ஒவ்வொரு குழுவிலும் எத்தனை பந்துகள்? ☐

மொத்த பந்துகள் எத்தனை?

$5 + 5 + 5 + 5 + 5 + 5 = 30$

5 வீதமுள்ள 6 குழுக்கள்

6 தடவை 5 சேர்த்தால் 30.

**$6 \times 5 = 30$**

இரண்டாவது குழுவிற்கு கிடைத்ததை பாருங்கள்.



5 வீதமுள்ள 3 குழுக்கள்

3 தடவை 5 சேர்த்தால் 15.

$5 + 5 + 5 = 15$

**$3 \times 5 = 15$**

மூன்றாவது குழுவிற்கு கிடைத்தது.

$5 + 5 + 5 + 5 + 5 + 5 + 5 + 5 = 40$

5 வீதமுள்ள 8 குழுக்கள்

8 தடவை 5 சேர்த்தால் 40



**$8 \times 5 = 40$**

நான்காவது குழு 5 வீதமுள்ள 10 குழுக்கள் ஆக்கினர்.

மொத்த பந்துகள் எத்தனை?

10 தடவை 5

.. × ... = ...

முதல், இரண்டாம் குழுவிற்கு மொத்தம் எத்தனை கிடைத்தது?

முதல் குழு $6 \times 5 = 30$

இரண்டாம் குழு $3 \times 5 = 15$

இரண்டு குழுக்களுக்கும் சேர்த்து கிடைத்தவை?

$$30 + 15 = 45$$

மொத்தம் = 5 வீதமுள்ள 9 குழுக்கள்

$$9 \times 5 = 45$$

## பள்ளிப் பேருந்து

பள்ளி விட்டபின் பேருந்தில் ஏறுவதற்காக குழந்தைகள் குழுக்களாக நின்றனர்.




| எத்தனை குழுக்கள் உள்ளன? | ஒரு குழுவில் எத்தனை பேர் உள்ளனர்? | மொத்தம் குழந்தைகள் எத்தனை? |
|---|---|---|
| | | |

ஐந்து குழுக்கள் பேருந்தில் முதலில் ஏறின.

எத்தனை பேர் ஏறினர்?

5 தடவை 5

.... × ... = .....

மீதி உள்ளது எத்தனை பேர்?

.... × ... = .....



ஒரு செம்பருத்தி பூவிற்கு இதழ்கள் ஐந்து

இரண்டு செம்பருத்தி பூவிற்கு இதழ்கள் பத்து

மூன்று செம்பருத்தி பூவிற்கு இதழ்கள் பதினைந்து

நான்கு செம்பருத்தி பூவிற்கு இதழ்கள் இருபது

ஐந்து செம்பருத்தி பூவிற்கு இதழ்கள் இருபத்தி ஐந்து

..........................................................................

..........................................................................

..........................................................................

## நாம் விளையாடுவோம்

ஆசிரியை எல்லோருக்கும் நாணயங்கள் கொடுத்தார்.



இம்முறை ஐந்து ரூபாய் நாணயங்கள் கொடுத்தார். நியாவிற்கு 6 நாணயங்கள் கிடைத்தன. சியாவுக்கு 3 உம் கிடைத்தது.

இரண்டு பேருக்கும் சேர்த்து எத்தனை ரூபாய்க்கான நாணயங்கள் கிடைத்தன?

பிற குழந்தைகளுக்கு கிடைத்த நாணயங்களின் எண்ணிக்கையை பாருங்கள். கட்டங்களை நிரப்புக.

| பெயர் | எண்ணிக்கை | மொத்தம் ரூபாய் |
|---|---|---|
| ராகுல் | 4 | $4 \times 5 = 20$ |
| அப்சல் | 5 | |
| ஜோணி | 3 | |
| ஆதிரா | 2 | |
| நவமி | 1 | |
| கோபிகா | 7 | |

ராகுலுக்கும் ஆதிராவுக்கும் சேர்த்து மொத்தம் எத்தனை ரூபாய்க்கான நாணயங்கள் கிடைத்தன? ☐

ஜோணிக்கும் கோபிகாவிற்கும் சேர்த்து கிடைத்தது? ☐

## பலகாரம்

பள்ளியில் நடைபெறும் பலகார விழாவில் கலந்து கொள்வதற்காக நிவ்யா, ஹயா இருவர் வீட்டிலும் உண்ணியப்பம் தயாரிக்கின்றனர்.



ரீனா 3 பாக்கெட் உண்ணியப்பம் வாங்கினாள்.

3 பாக்கெட்டிலும் சேர்த்து உண்ணியப்பம் எத்தனை?

10 வீதமுள்ள 3 பாக்கெட்

10 + 10 + 10

| 3 தடவை 10 |
|---|

$= 3 \times 10$

$= 30$

3 தடவை 10
30 அல்லவா.

சிவா 4 பாக்கெட் உண்ணியப்பம் வாங்கினான்.

உண்ணியப்பம் எத்தனை?

10 + 10 + 10 + 10

............. தடவை .............

............. × ............. = .............

ரீனா, சிவா இருவரும் சேர்ந்து
மொத்தம் எத்தனை உண்ணியப்பம் வாங்கினர்?

**10 + 10 + 10** + **10 + 10 + 10 + 10**

| | | | | |
|---|---|---|---|---|
| $3 \times 10$ | + | $4 \times 10$ | = | $7 \times 10$ |
| 30 | + | 40 | = | 70 |

சனா 6 பாக்கெட் உண்ணியப்பம் வாங்கினாள்.

சனா மொத்தம் எத்தனை
உண்ணியப்பம் வாங்கினாள்? [ ]

## எண்ணி எழுதலாம்

| | |
|---|---|
| 5 பாக்கெட் | |
| 9 பாக்கெட் | |
| 8 பாக்கெட் | |
| 1 பாக்கெட் | |

## நிரப்புங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | × | 10 | = | 10 |
| 2 | × | ..... | = | 20 |
| ..... | × | ..... | = | 30 |
| ..... | × | ..... | = | ..... |
| ..... | × | ..... | = | ..... |
| ..... | × | ..... | = | ..... |
| ..... | × | 10 | = | 70 |
| ..... | × | ..... | = | ..... |
| ..... | × | ..... | = | ..... |
| ..... | × | ..... | = | ..... |

## வளையல், மாலை, கம்மல்

ஹயா, நிவ்யா, தோழிகள் சேர்ந்து அம்மாவுடன் கடைக்குச் சென்றனர்.
அவர்களுக்கு வளையலும் கம்மலும் மாலையும் வேண்டும்.
அம்மாவுடன் சேர்ந்து அவர்கள் ஒவ்வொன்றையும் தேர்ந்தெடுத்தனர்...



## எத்தனை ரூபாய்?

நிவ்யா 6 வளையலும் ஹயா 4 வளையலும் வாங்கினர். மொத்தம் எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்?

வேறு ஏதாவது முறையில் கணக்கிடலாமா?

## மீதி எத்தனை?

நிவ்யா 4 ஜோடி கம்மலும் ஹயா 5 ஜோடி கம்மலும் வாங்கினர். 100 ரூபாய் கடைக்காரரிடம் கொடுத்தால் மீதி எத்தனை ரூபாய் கிடைக்கும்?

எவ்வாறு கணக்கிட்டீர்கள்?

வேறு சிலர் வாங்கியப் பொருட்களைப் பாருங்கள். ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டிய ரூபாயை கீழேயுள்ள கட்டத்திலிருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.

| | |
|---|---|
| ரீனா 5 ஜோடி கம்மல் | $5 \times 10 =$ ...... |
| லைனா 4 வளையல் | ..... $\times$ ... $=$ ...... |
| ஆமி 8 ஜோடி கம்மல் | ..... $\times$ ... $=$ ...... |
| சனா 3 மாலை | ..... $\times$ ... $=$ ...... |
| சிவா 7 வளையல் | ..... $\times$ ... $=$ ...... |

**40** **50** **80** **70** **30**

ஒரு நண்டிற்கு கால்கள் பத்து
இரண்டு நண்டிற்கு கால்கள் இருபது
மூன்று நண்டிற்கு கால்கள் முப்பது
நான்கு நண்டிற்கு கால்கள் நாற்பது
ஐந்து நண்டிற்கு கால்கள் ஐம்பது

.................................................................

.................................................................

.................................................................

## ஹாய் அப்பா வந்தாச்சி...

மாலையில் அப்பாவின் வருகைக்காக நிவ்யாவும், ஹயாவும் காத்திருந்தனர். அதோ... வண்டியின் சப்தம்...
இரண்டு பேரும் முற்றத்திற்கு ஓடினர்.
அவர் கொண்டு வந்த பலகார பாக்கெட்டை அவர்களுக்கு கொடுத்தார்.




அப்பா கொண்டுவந்தது 8 லட்டுகள்
அதை அப்பா, அம்மா, நிவ்யா, ஹயா ஒரே போல் பங்கிட்டனர்.

ஒவ்வொருவருக்கும் எத்தனை வீதம் கிடைத்தன? ☐

## கூட்டுசேர்வோம்... விளையாடுவோம்...

விடுமுறை நாளில் பிரதீசும், மாலிக்கும்
நிவ்யா, ஹயாவின் வீட்டிற்கு விளையாடச் சென்றனர்.



இரண்டு அணியாக விளையாட்டை துவங்கலாம் நிவ்யா கூறினாள். ஒரு கோட்டின் இரண்டு பக்கத்தில் அவர்கள் நின்றனர்.

ஒரு அணியில் எத்தனை பேர்? ☐

அதோ... நிஷியும் சனாவும் வருகின்றனர்.

இப்போது எத்தனை பேர்? ☐

அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு அணியிலும் சேர்ந்தனர்.

இப்போது ஒரு அணியில் எத்தனை பேர்? ☐

4 பேர் 2 அணிகள் ஆனபோது ஒரு அணியில் 2 பேர்
6 பேர் 2 அணிகள் ஆனபோது ஒரு அணியில் 3 பேர்

8 பேர் 2 அணிகள் ஆனபோது ஒரு அணியில் எத்தனை பேர்? ☐

## டோக்கன் விளையாட்டு

2, 5, 10 என புள்ளிகள் எழுதிய டோக்கன்கள் உள்ளன. ஒருவருக்கு 10 டோக்கன் கிடைக்கும். கிடைத்த டோக்கனில் இருந்து கூடுதல் புள்ளிகள் கிடைத்தவர் வெற்றி பெறுவார். சிலருக்கு கிடைத்த டோக்கன்களின் எண்ணிக்கையை பாருங்கள். கிடைத்த புள்ளிகளைக் கணக்கிடுங்கள்.

| பெயர் | 2 | 5 | 10 | மொத்த புள்ளிகள் | |
|---|---|---|---|---|---|
| கனி | 4 | 4 | 2 | 4 × 2 = 8<br>4 × 5 = 20<br>2 × 10 = 20 | **48** |
| தனு | 8 | 1 | 1 | 8 × 2 = .....<br>..... × 5 = .....<br>..... × 10 = ..... | |
| அமல் | 4 | 2 | 4 | ..... × 2 = .....<br>..... × 5 = .....<br>..... × 10 = ..... | |
| நிளா | 1 | 3 | 6 | ..... × 2 = .....<br>..... × 5 = .....<br>..... × 10 = ..... | |

இதில் யாருக்கு கூடுதல் புள்ளிகள்?

மிகவும் குறைந்த புள்ளிகள் யாருக்கு?

இந்த விளையாட்டில் ஒருவருக்கு அதிகப்படியாக எத்தனை புள்ளிகள் கிடைக்கும்?



# 8

# அளந்து பார்ப்போம்



## நீபாவின் வீடு.




நீபா உருவாக்கிய வீட்டின் படம்.



நீபா எத்தனை ஈர்க்கில் உபயோகித்தாள்? ☐

நீளம் கூடிய ஈர்க்கிலும் நீளம்
குறைந்த ஈர்க்கிலும் உண்டல்லவா?

நாமும் ஒரு வீடு உருவாக்குவோம்.

ஒரே நீளமுள்ள ஈர்க்கில்கள் வேண்டுமல்லவா?

ஒரே நீளத்தில் ஒடிப்பது எவ்வாறு?
நண்பர்களோடு கலந்துரையாடுங்கள்.




சுவருக்காக எடுத்த
2 ஈர்க்கிலை பாருங்கள்.



பெரியதிற்கு ✓ இடவும்.

✓ இட்டது பெரியதுதானா?
கண்டுபிடிப்பது எவ்வாறு?
இரண்டும் ஒரே நீளமாக இருக்க என்ன
செய்ய வேண்டும்?




இதுபோன்று வீட்டிற்கு வேண்டிய
ஈர்க்கில்களும் வெட்டி எடுத்து
ஒட்டி அழகான வீடு உருவாக்குங்கள்.

## எளியவழி கண்டுபிடிக்கலாமா?

நீபா மறுநாள் வகுப்பிற்கு வந்தபொழுது குளவியை கூட்டில் சேர்ப்போமா என்ற புதிருடன் வந்தாள்.
தீப்பெட்டிக் குச்சிகள் வழியாக குளவி கூட்டிற்குச் செல்ல வேண்டும்.



குளவிக்கு கூட்டிற்குச் செல்ல பல வழிகள் உண்டல்லவா? ஒவ்வொரு வழிக்கும் எத்தனை தீப்பெட்டிக்குச்சிகள் தேவை? கட்டத்தில் எழுதுங்கள்.

| வழி | கூட்டிற்குள்ள தூரம் |
|---|---|
| 1 | ................ தீப்பெட்டிக் குச்சிகள் |
| 2 | ................ தீப்பெட்டிக் குச்சிகள் |
| 3 | ................ தீப்பெட்டிக் குச்சிகள் |
| 4 | ................ தீப்பெட்டிக் குச்சிகள் |
| 5 | ................ தீப்பெட்டிக் குச்சிகள் |
| 6 | ................ தீப்பெட்டிக் குச்சிகள் |
| 7 | ................ தீப்பெட்டிக் குச்சிகள் |
| 8 | ................ தீப்பெட்டிக் குச்சிகள் |
| 9 | ................ தீப்பெட்டிக் குச்சிகள் |

மிகவும் குறைந்த தூரமுள்ள வழிக்கு
எத்தனை தீப்பெட்டிக் குச்சிகள் உள்ளன?

## நீளம் அளக்கலாம்




உங்கள் வகுப்பில் பெஞ்சின் நீளத்தையும் கதவின் உயரத்தையும் கம்பு உபயோகித்து அளந்து பாருங்கள்...

நான் கண்டுபிடித்தது

கதவின் உயரம் ☐ கம்பு

பெஞ்சின் நீளம் ☐ கம்பு

## மேசையின் நீளம் அளப்போம்.

வகுப்பிலுள்ள மேசையின் நீளத்தை விரலால் அளப்போமா?



| | நான் அளந்தது | நண்பன் அளந்தது | ஆசிரியை அளந்தது |
|---|---|---|---|
| மேசையின் நீளம் | .............. சாண் | .............. சாண் | .............. சாண் |
| மேசையின் உயரம் | .............. சாண் | .............. சாண் | .............. சாண் |

ஆசிரியை அளந்ததும் நீங்கள் அளந்ததும் ஒன்றுபோல் தானா?

நான் கண்டுபிடித்தது

## உயரம் அளக்கலாம்.



| அம்மாவின் உயரம் | அப்பாவின் உயரம் | நீபாவின் உயரம் | அண்ணனின் உயரம் |
|---|---|---|---|
| 13 செங்கல் | | | |

கீழேயுள்ள பொருட்களில் மிகவும்

நீளம் கூடியதிற்கு (1) அதைவிடக் குறைந்தது (2) அதைவிடக் குறைவு (3) என வரிசையாக எண்ணை வட்டத்தில் எழுதுங்கள்.



- ◯ பென்சில் ........................கட்டங்கள்
- ◯ ஸ்பூண் ........................கட்டங்கள்
- ◯ இரப்பர் ........................கட்டங்கள்
- ◯ பேனா ........................கட்டங்கள்
- ◯ ஊசி ........................கட்டங்கள்

நீபா தனது தம்பியின் உயரத்தை அளந்ததை பாருங்கள்.




பென்சில் உபயோகித்து உங்களின் உயரத்தையும் நண்பனின் உயரத்தையும் கண்டுபிடியுங்கள்.
இதுபோன்று நாற்காலியின் உயரத்தையும் புத்தகத்தின் நீளத்தையும் கண்டுபிடியுங்கள்.

நாற்காலியின் உயரம் .................................. பென்சில்
புத்தகத்தின் நீளம் ..................................பென்சில்

கூடுதல் அளவுள்ளது எது?
எத்தனை கூடுதல்?

## தடிமன் கூடிய மரம்



பள்ளி மைதானத்திலுள்ள சில மரங்களின் தடிமனை கயிறு உபயோகித்து கண்டுபிடியுங்கள். எந்த மரத்திற்கு கூடுதல் தடிமன்?

## நின்று குதித்தல்

நமது வகுப்பு குழந்தைகளில் யார் அதிக தூரம் குதிக்கிறார்கள்? குதித்த தூரத்தை அடையாளப்படுத்தி கால் பாதத்தால் அளக்கவும்.

## எடை கூடியதும் குறைந்ததும்

அம்மாவும் நீபாவும் பழக்கடைக்குச் சென்றார்கள்.



எதனால் என்று உங்களுக்குத் தெரியுமா?
ஓர் ஆப்பிள், ஓர் ஆரஞ்சு இதில் அதிக எடையுள்ளது எது?
எவ்வாறு கண்டுபிடிக்கலாம்.
எடை அளக்க பயன்படுத்தும் கருவிகளைப் பாருங்கள்.










## விளையாட்டு தராசு உருவாக்கலாம்

**என்னென்ன பொருட்கள் வேண்டும்?**
**எப்படி உருவாக்குவது?**



படத்தில் காண்பது போன்று தராசு உருவாக்குங்கள். உங்களின் பையிலுள்ள பொருட்களில் எடை கூடியது எது? கண்டுபிடித்து வட்டம் வரையுங்கள்.



## தண்ணீரை அளக்கலாம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாத்திரங்களில் எத்தனை தம்ளர் தண்ணீர் ஊற்றினால் அது நிரம்பும்.

| பாத்திரம் | ஊகித்தது | சரியான அளவு |
|---|---|---|
| தண்ணீர் குப்பி | | |
| ஜாடி | | |
| பானை | | |

மிக அதிகமாக தண்ணீர் நிரம்பும் பாத்திரம் எது?




வீட்டிலுள்ள பக்கெட்டில் எத்தனை கப் தண்ணீர் நிரம்பும்? ஊகித்து சொல்லுங்கள்.

சரிதானா எனப் பரிசோதியுங்கள்.
பக்கெட் நிரம்ப எத்தனை கப் தண்ணீர் தேவைப்பட்டது?



# 9
# நாட்காட்டி விளையாட்டு



# இரயில் பயணம்



ஹீராவும் குடும்பத்தினரும் வந்தேபாரத் இரயிலில் காசர்கோட்டிலிருந்து சொர்ணூருக்குச் செல்கின்றனர். இரயில் தெற்கு நோக்கி செல்கிறது.

7 மணிக்கு இரயில் புறப்பட்டது.
இரயில் புறப்பட்ட நேரம்
கடிகாரத்தில் காண்பித்திருப்பதை பாருங்கள்.




இரயில் கண்ணூரைச் சென்றடைந்தது.
தேநீரும் பலகாரமும் கொண்டுவந்தனர்.
கண்ணூரைச் சென்றடைந்த நேரத்தை
பாருங்கள். 8 மணி.




இரயில் காசர்கோட்டிலிருந்து
கண்ணூர் செல்ல ஒரு மணிநேரம் ஆனது.




வண்டி புறப்பட்டது. ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். ஆறும், காயலும் கடலையும் பார்த்தாள். நேரம் போனதே தெரியவில்லை. இரயில் நின்றது. அப்பா சொன்னார். 'கோழிக்கோடு வந்தாச்சி'.

'நேரம் எவ்வளவு ஆச்சு அப்பா' ஹீரா கேட்டாள். அப்பா கூறினார். '9 மணியாச்சி. கண்ணூரிலிருந்து கோழிக்கோடு செல்ல ஒரு மணி நேரமாகும்.'




எனில் காசர்கோட்டிலிருந்து கோழிக்கோட்டை அடைய எவ்வளவு நேரம் ஆனது?




வண்டி புறப்பட்டது. அப்போது வடக்கு நோக்கி ஓர் இரயில் கடந்து சென்றது.

‘நாம் எப்போது சொர்ணூருக்குச் செல்வோம்?’ ஹீரா கேட்டாள்.

‘10 மணியாகும்’ அப்பா கூறினார்.

10 மணிக்கு அவர்கள் சொர்ணூரில் இறங்கினர். சொர்ணூரில் இறங்கிய நேரத்தை கடிகாரத்தில் அடையாளப் படுத்துங்கள். அங்கிருந்து மலம்புழை சென்றனர். கிழக்குப் பக்கமாக காரில் சென்றனர்.






1 மணிக்கு மலம்புழை அணைக்கட்டை அடைந்தனர்.





## நேரம் எழுதலாம்



| | | | |
|---|---|---|---|
| 2 மணி | | | |

நேரத்தை கடிகாரத்தில் அடையாளப்படுத்துங்கள்.





| 8 மணி | 5 மணி | 3 மணி |
|---|---|---|

## எத்தனை நாட்கள்

ஹீராவும் குடும்பத்தினரும் மாமாவின் கல்யாணத்தில் பங்கெடுப்பதற்காக பாலக்காட்டிற்கு வந்தனர்.
டிசம்பர் 9–ஆம் தேதி காலையில் காசர்கோட்டிலிருந்து புறப்பட்டனர். கல்யாணம் முடிந்தபின் 13–ஆம் தேதி இரவு அவர்கள் வீட்டை அடைந்தனர்.
அவர்கள் வீட்டில் இல்லாமல் இருந்தது எத்தனைநாட்கள் என நாட்காட்டி பார்த்து கண்டுபிடித்து வண்ணம் தீட்டுங்கள். நாட்களை எண்ணி எழுதுங்கள்.

**December டிசம்பர் 2025**

| ஞாயிறு SUNDAY | திங்கள் MONDAY | செவ்வாய் TUESDAY | புதன் WEDNESDAY | வியாழன் THURSDAY | வெள்ளி FRIDAY | சனி SATURDAY |
|---|---|---|---|---|---|---|
| ★ | 1 15 | 2 16 | 3 17 | 4 18 | 5 19 | 6 20 |
| 7 21 | 8 22 | 9 23 | 10 24 | 11 25 | 12 26 | 13 இரண்டாம் சனி 27 |
| 14 28 | 15 29 | 16 1 | 17 2 | 18 3 | 19 4 | 20 5 |
| 21 6 | 22 7 | 23 8 | 24 9 | 25 கிறிஸ்துமஸ் 10 | 26 11 | 27 12 |
| 28 13 | 29 14 | 30 15 | 31 16 | ★ | ★ | ★ |

ஹீராவும் குடும்பத்தினரும் பயணம் புறப்பட்ட நாள் எது?





அவர்கள் திரும்பி வந்த நாள் எது?

புதன் கிழமை கல்யாணம் அன்றைய தேதி என்ன?

அவர்கள் வீட்டில் இல்லாத நாட்களின் தேதிகள் எவை?

## ஊட்டி பயணம்

கல்யாணத்திற்கு பின்பு மாமாவும் அத்தையும் ஊட்டிக்குச் சென்றனர். 14– ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு புறப்பட்டனர்.



20–ஆம் தேதி சனிக்கிழமை இரவு திரும்பி வந்தனர். அவர்கள் ஊட்டியில் இருந்த நாட்கள் எத்தனை?

இந்த நாட்களை நாட்காட்டியில் வண்ணம் தீட்டுங்கள். எண்ணி எழுதுங்கள்.

நாட்கள் எவை? தேதிகள் எழுதுங்கள்.

## ஹீராவின் டயரி

9–ஆம் தேதி இரவு ஹீரா எழுதிய டயரியைப் பாருங்கள்.

*பாலக்காடு,*
*09.12.2025*



*நான், அப்பா, அம்மா மூவருமாக மாமா வீட்டிற்கு புறப்பட்டோம். காலை வந்தேபாரத் இரயிலில் சென்றோம். காசர்கோட்டிலிருந்து தெற்கு பக்கமாக பயணம் செய்தோம். மதியம் மலம்புழை அணைக்கட்டை காணச் சென்றோம். அதன் பின் பூந்தோட்டத்தைச் சுற்றிப்பார்த்தோம். றோப்வேயில் ஏறினோம். முதலில் எனக்குப் பயமாக இருந்தது. பின்னர் அதிலிருந்து கீழேயுள்ள காட்சிகளைப் பார்த்தேன். நல்ல அழகு. மாலை அங்கிருந்து புறப்பட்டோம். இரவு மாமாவின் வீட்டை அடைந்தோம்.*

டயரியிலுள்ள நேரத்தைக் குறிப்பிடும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| • காலை | • | • | • |

## நாட்காட்டி பார்க்கலாம்.

சித்துவும் ஹீராவும் நாட்காட்டியைப் பார்க்கின்றனர்.



வேறு என்னென்ன உள்ளன? எழுதுங்கள்.

வாரத்திலுள்ள நாட்களைப் பற்றி
ஒரு பாட்டு பாடலாம்.



## கிழமைப் பாடல்

ஞாயிற்றுக் கிழமை நகையைக் காணோம்.
திங்கள் கிழமை திருடன் கிடைத்தான்.
செவ்வாய்க் கிழமை ஜெயிலுக்கு போனான்.
புதன் கிழமை புத்தி வந்தது.
வியாழக் கிழமை விடுதலை அடைந்தான்.
வெள்ளிக் கிழமை நல்லவன் ஆனான்.
சனிக் கிழமை சாப்பிட்டுப் படுத்தான்.
அப்புறம் அவன்கதை, யாருக்குத் தெரியும்.

## மாதங்கள் பன்னிரெண்டு

ஜனவரி, பெப்ரவரி,
மார்ச், ஏப்ரல்,
மேயும், ஜூனும், ஜூலையும்,
ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர்,
நவம்பர், டிசம்பர், மாதங்கள்
பன்னிரெண்டல்லவா மாதங்கள்.




## நாட்காட்டி பார்த்து சொல்லுங்கள்.

31 நாட்களுள்ள மாதங்கள் எவை?

30 நாட்களுள்ள மாதங்கள் எவை?

30 இல் குறைவான நாட்களுள்ள மாதம் எது?

ஜனவரி மாதத்தில்
31 நாட்கள்.
எல்லா மாதத்திலும்
நாட்கள் இதுபோல் அல்ல.

## நாட்காட்டி விளையாட்டுகள்




September செப்டம்பர் 2025

| ஞாயிறு SUNDAY | திங்கள் MONDAY | செவ்வாய் TUESDAY | புதன் WEDNESDAY | வியாழன் THURSDAY | வெள்ளி FRIDAY | சனி SATURDAY |
|---|---|---|---|---|---|---|
| ★ | 1 16 | 2 17 | 3 18 | 4 19 | 5 തിരുവോണം 20 | 6 21 |
| 7 22 | 8 23 | 9 24 | 10 25 | 11 26 | 12 27 | 13 രണ്ടാം ശനി 28 |
| 14 29 | 15 30 | 16 31 | 17 1 | 18 2 | 19 3 | 20 4 |
| 21 5 | 22 6 | 23 7 | 24 8 | 25 9 | 26 10 | 27 11 |
| 28 12 | 29 13 | 30 14 | ★ | ★ | ★ | ★ |



| | |
|---|---|
| 1 | 2 |
| 8 | 9 |

1 உம் 9 உம்
மூலையோடு மூலை.
2 உம் 8 உம்
மூலையோடு மூலை.

$1 + 9 = 10$
$2 + 8 = 10$

1 உம் 8 உம்
ஒரு நிரலிலாகும்.

1 உம் 2 உம்
ஒரு வரிசையிலாகும்.

எல்லா எண்களும் அதுபோல்தானா? செய்துபாருங்கள்.

| | |
|---|---|
| 6 | 7 |
| 13 | 14 |

| | |
|---|---|
| 8 | 9 |
| 15 | 16 |

| | |
|---|---|
| 17 | 18 |
| 24 | 25 |

-------------------------- -------------------------- --------------------------

-------------------------- -------------------------- --------------------------

“ஒன்றாவது நிரலிலுள்ள எண்களின் தொகைக்கும் இரண்டாவது நிரலிலுள்ள எண்களின் தொகைக்கும் இடையே உள்ள வித்தியாசம் 2 அல்லவா?”
சித்து கூறினான்.

| | |
|---|---|
| **6** | **7** |
| **13** | **14** |

சரிதான்
$6 + 13 = 19$
$7 + 14 = 21$



பிற எண்களையும் செய்து பார்த்து கண்டுபிடியுங்கள்.

$8 + 15 =$ $\quad$ $17 + 24 =$ $\quad$ $19 + 26 =$

$9 + 16 =$ $\quad$ $18 + 25 =$ $\quad$ $20 + 27 =$

நாட்காட்டியை பார்த்து இதுபோன்றுள்ள கூடுதல் எண்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.




நாட்காட்டியிலுள்ள எண்களுக்கிடையே வேறு ஏதாவது தொடர்புகள் காண முடியுமா?



# 10
# சிறந்த தொடர்புகள்



## குழுக்களாக்கி விளையாடலாம்



கொஞ்சம் முத்துகள் உள்ளன.
ஒவ்வொருவரும் சில முத்துகளை எடுக்கலாம்.
கிடைத்த முத்துகளை மீதி வராமல் இரண்டு வீதமுள்ள குழுக்களாக்கினால் ஒரு புள்ளி கிடைக்கும்.

சுமாவிற்கு 16 முத்துகள் கிடைத்தன.
சுமாவிற்கு புள்ளி கிடைக்குமா?
நண்பர்களுக்குக் கிடைத்த எண்ணிக்கையைப் பாருங்கள்.

7, 22, 11, 10, 12, 14, 25, 18, 20, 19

இவற்றில் எந்தெந்த எண்ணிக்கையிலுள்ள முத்துகளை மீதிவராமல் 2 வீதமுள்ள குழுக்களாக்க முடியும்?

2 வீதமுள்ள குழுக்களாக்கும் போது ஒன்று மீதி வரும் எண்கள் எவை?

வேறு சில எண்கள் எழுதுங்கள்.

| 2 வீதமுள்ள குழுக்களாக்கும்போது ஒன்று மீதி வரும் எண்கள் | 2 வீதமுள்ள குழுக்களாக்கும்போது ஒன்று மீதி வராத எண்கள் |
|---|---|
| | |

1, 3, 5, 7, ......., ........,

என்பவற்றை ஒற்றை எண்கள் என அழைக்கின்றனர்.

2, 4, 6, 8, ......., ........,

என்பவற்றை இரட்டை எண்கள் என அழைக்கின்றனர்.

# இலக்கங்களின் தொகை

மியா கணித மன்றத்தில் கூறுவதற்கான கணக்குகளைப் பற்றி ஆலோசிக்கிறாள்.




இலக்கங்களின் தொகை 10 கிடைக்கும் இரண்டிலக்க எண்கள்.

கண்டுபிடித்த எண்களை வரிசையாக சிறியதிலிருந்து பெரியது வரை எழுதுங்கள்.

இவையில் அடுத்தடுத்த எண்களுக்கிடையே உள்ள தொடர்பு என்ன? எழுதுங்கள்.

## வரிசை மாற்றலாம்

மியா சார்டில் எழுதியதைப் பாருங்கள்.

$8 + 9 = 17$
$9 + 8 = 17$

$23 + 11 = 34$
$11 + 23 = 34$

$45 + 23 = 68$
$23 + 45 = 68$




கூடுதல் எண்கள் எழுதி நீங்களும் செய்து பாருங்கள்.
அவற்றை நோட்டுப் புத்தகத்தில் எழுதுங்கள்.

## அடுத்தடுத்த எண்களின் தொகை

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | + | 2 | = | 3 |
| 2 | + | 3 | = | 5 |
| 3 | + | 4 | = | 7 |
| 6 | + | 7 | = | 13 |
| 8 | + | 9 | = | ......... |
| 10 | + | 11 | = | ......... |
| 12 | + | 13 | = | ......... |
| 15 | + | 16 | = | ......... |

மியாவும் நண்பர்களும் அடுத்தடுத்த 2 எண்ணல் எண்களை கூட்டி எழுதியிருப்பதை பாருங்கள். தொடர்ந்து எழுதுங்கள்.

அடுத்தடுத்த இரண்டு எண்ணல் எண்களின் தொகையின் சிறப்பு என்ன?

## ஒற்றை எண்கள்

இரண்டு ஒற்றை எண்களைக் கூட்டி பார்ப்போமா? மியா கோட்டாள். அவர்கள் கூட்டி எழுதினர். தொடர்ந்து வரும் எண்களை நீங்களும் கூட்டி எழுதுங்கள்.




1 + 3 = 4

3 + 5 = 8

7 + 5 = .........

3 + 9 = .........

11 + 7 = .........

..... + ..... = .........

..... + ..... = .........

இரண்டு ஒற்றை எண்களின் தொகையின் சிறப்பு என்ன?

இனி இரண்டு இரட்டை எண்களை கூட்டிப் பாருங்கள். தொகையின் சிறப்பு என்ன?

ஒரு ஒற்றை எண்ணையும் ஓர் இரட்டை எண்ணையும் கூட்டினால்?

## மீண்டும் மீண்டும் கழிக்கலாம்.

சுமியிடம் 16 ரூபாய் உள்ளது. 5 ரூபாய்க்கு பேனா வாங்கினாள். 3 ரூபாய்க்கு ஒரு பென்சிலும் வாங்கினாள். சுமியிடம் மீதி எத்தனை ரூபாய் உள்ளது?

**நான் கணக்கிட்டது**

கையில் இருந்தது
16 ரூபாய்
பேனாவும் பென்சிலும்
வாங்கிய போது
5 + 3 = 8 ரூபாய் செலவானது
மீதி 16 - 8 = 8 ரூபாய்

| | |
|---|---|
| சுமியிடம் உள்ளது. | 16 ரூபாய் |
| பேனா வாங்கியது. | 5 ரூபாய் |
| மீதி | = 16 − 5 = 11 ரூபாய் |
| பென்சில் வாங்கியது | = 3 ரூபாய் |
| மீதி | = 11 − 3 = 8 ரூபாய் |

16 இல் இருந்து 5 உம் 3 உம் கழித்தாலும்
16 இல் இருந்து 8 கழித்தாலும் கிடைப்பது ஒரே எண்.

24 இல் இருந்து 7 உம் 3 உம் கழிப்பதாக இருந்தால்?
24 இல் இருந்து எந்த எண்ணை கழிக்க வேண்டும்? ☐

46 இல் இருந்து 10 உம் 6 உம் கழிப்பதற்கு பதில்
46 இல் இருந்து எந்த எண்ணை கழிக்க வேண்டும்? ☐

## கூட்டிக் கூட்டி போகலாம்.

மியா சில எண்களை வரிசையாக எழுதியதை பாருங்கள்.

1, 3, 5, 7, ........., ............, .............

தொடர்ந்து வரும் எண்களை எழுதுங்கள்.

**இந்த எண்களின் சிறப்புகளைக் கண்டு பிடியுங்கள்.**

1 உடன் 2 வீதம் கூட்டி
எழுதும் எண்கள்?

இனி 2 உடன் 2 வீதம் கூட்டி கிடைக்கும் எண்களை எழுதிப் பாருங்கள்.

2, 4, 6, ......., ........, ..........

இந்த எண்களின் சிறப்பு என்ன?




இனி 5 உடன் 5 வீதம் கூட்டி கிடைக்கும் எண்களை எழுதிப் பாருங்கள்.

5, 10, 15, ......., ........, ..........

எண்களின் சிறப்பு என்ன?

10 உடன் 10 வீதம் கூட்டி எண் தொடர் எழுதுங்கள்.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

ஒன்றின் இடத்தில் 0 வரும் இரண்டிலக்க எண்கள் எத்தனை?

1 உடன் 10 வீதம் கூட்டி எண் தொடர் எழுதுங்கள்.

1, 11, 21, ......., ........, ..........

ஒன்றின் இடத்தில் 1 வரும் இரண்டிலக்க எண்கள் எத்தனை?

1 முதல் 7 வரையுள்ள எண்களை வட்டத்தில் எழுதுங்கள். ஒரே வரியிலுள்ள 3 எண்களைக் கூட்டினால் தொகை 12 கிடைக்க வேண்டும். எழுதிய எண்களை மீண்டும் எழுதக்கூடாது.



கீழே கொடுத்துள்ளவற்றில் எந்தெந்த வரிசைகளில் எண்கள் சிறியதிலிருந்து பெரியது வரை வரிசையாக உள்ளது? அவற்றிற்கு ✓ அடையாளமிடுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | 28 | 31 | 34 | 37 | ☐ |
| 82 | 78 | 74 | 72 | 68 | ☐ |
| 63 | 62 | 61 | 60 | 29 | ☐ |
| 52 | 58 | 64 | 70 | 76 | ☐ |
| 43 | 46 | 42 | 45 | 41 | ☐ |
| 79 | 80 | 81 | 82 | 83 | ☐ |

## எண் தொடர்கள்

எண் தொடரில் விடுப்பட்ட எண் எது?

1) 10, 18, 26, 34, ........, 50

2) 31, 40, 49, ........., 67

3) 88, 82, 76, 70, ..........

4) 56, 60, 64, ............, 72

5) 95, 89, 83, 77, .............

## எண்கள் உருவாக்குவோம்.

மியாவும் நண்பர்களும் இலக்கங்கள் உபயோகித்து எண்கள் உருவாக்குகின்றனர்.

ஒருவர் இரண்டு எண் அட்டைகள் எடுக்கலாம். அவை உபயோகித்து இரண்டிலக்க எண்கள் உருவாக்க வேண்டும்.

மியாவுக்கு கிடைத்த எண் அட்டைகள்.




3　　5

மியா உருவாக்கிய இரண்டிலக்க எண்கள் : 35, 53

நண்பர்களுக்கு கிடைத்த எண் அட்டைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
அவர்கள் உருவாக்கிய இரண்டிலக்க எண்களை எழுதுங்கள்.

2　　6　　-----------------------------------------

9　　8　　-----------------------------------------

5　　0　　-----------------------------------------

4, 5 என்ற இலக்கங்கள் திரும்ப திரும்ப வராமல் என்னென்ன இரண்டிலக்க எண்கள் உருவாக்கலாம்?

-----------------------------------

திரும்ப திரும்ப உபயோகித்தாலோ?

# கோட்டை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20 | 30 | 27 | 34 | 26 | 28 | 38 |
| 25 | 15 | 13 | 35 | 25 | 49 | 56 |
| 12 | 18 | 64 | 40 | 30 | 48 | 27 |
| 28 | 32 | 29 | 35 | 20 | 20 | 20 |
| 20 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |

## 3 பேர் விளையாடலாம்

ஒரு வட்டத்திலிருந்து அடுத்த வட்டத்திற்கு கோடு வரைய வேண்டும்.

கோடுகள் குறுக்காக வரையக் கூடாது.

அதில் கிடைக்கும் எண்களைக் கூட்டவும்.

அடுத்த இருவரும் இதைப்போன்று செய்ய வேண்டும்.

மூன்று பேரும் அவ்வாறு செய்தபின் விடையாக கிடைக்க எண்களை பெரிய எண்ணிலிருந்து சிறிய எண்ணிற்கு வரிசைப்படுத்தவும்.

எண்களின் பெரியதற்கேற்ப 5, 3, 1 என்றிவ்வாறு புள்ளிகள் கிடைக்கும்.

அடுத்தடுத்த எண்கள் சேர்ந்து

சதுரம் ஆகும்பொழுது ஒரு கோட்டை உருவாகும்.

கோட்டை உருவாக்கிய நபருக்கு கூடுதலாக 10 புள்ளிகள் கிடைக்கும்.

கூடுதல் விபரங்களை ஆசிரியருடன் கேளுங்கள்

விளையாடுங்கள்..



# 11

# எண்ணி... எண்ணி... கட்டத்தில் ஆக்குவோம்



## திருவிழா சந்தை.

தானிக்கரை கிராமத்தில் திருவிழா.
அங்குள்ள திருவிழா சந்தை பார்க்க வேண்டிய ஒன்றாகும்.
சந்தையிலுள்ள கடையில் பொம்மைகள் வைத்திருப்பதை பாருங்கள்.



ஒவ்வொரு இனம் பொம்மைகளின் எண்ணிக்கையை அட்டவணையில் எழுதுங்கள்.

| பொம் மைகள் |  |  |  |  |  |
|---|---|---|---|---|---|
| எண் ணிக்கை | | | | | |

கூடுதல் உள்ள பொம்மை எது? [ ]

குறைவாக உள்ள பொம்மை எது? [ ]

## பறவை பொம்மைகள்

பறவை பொம்மைகளின் படத்தைப் பாருங்கள்.

ஒவ்வொன்றும் எத்தனை வீதம் உள்ளன? அட்டவணையில் எழுதுங்கள்.



| பொம்மை | கிளிப் பொம்மை | வாத்துப் பொம்மை | கோழிப் பொம்மை | ஆந்தைப் பொம்மை | பருந்துப் பொம்மை |
|---|---|---|---|---|---|
| எண் ணிக்கை | | | | | |

மிகக் கூடுதலாக உள்ளது எந்த பொம்மை?

ஆந்தைப் பொம்மைகளைவிட கிளிப் பொம்மைகள் எத்தனை கூடுதல்?

கோழிப் பொம்மையா வாத்து பொம்மையா கூடுதல்?

எத்தனை கூடுதல்?

இனி ஒரு வினா நீங்கள் எழுதுங்கள்.
நண்பர்களிடம் கேளுங்கள்.

## பொம்மையின் விலை

பொம்மைகளின் விலையைப் பாருங்கள்.

| பொம்மை | விலை |
|---|---|
|  | 125 ரூபாய் |
|  | 89 ரூபாய் |
|  | 99 ரூபாய் |
|  | 69 ரூபாய் |
|  | 79 ரூபாய் |
|  | 89 ரூபாய் |

ஒரே விலையுள்ள பொம்மைகள் எவை? விலை எவ்வளவு?

வாத்துப் பொம்மைக்கும் பூனைப் பொம்மைக்கும் 20 ரூபாய் விலை வித்தியாசம் உள்ளது எனக் கூறுவது சரியா? எதனால்?

10 ரூபாய் விலை வித்தியாசமுள்ள இரண்டு பொம்மைகளின் பெயரையும் விலையையும் எழுதுங்கள்?

90 ரூபாய்க்கு குறைவாக விலையுள்ள பொம்மைகள் எவையெல்லாம்?

100 ரூபாய் கொண்டு வந்த ஒரு குழந்தைக்கு வாங்க முடியாத பொம்மை எது?

எதனால்?

## அட்டவணையைப் பாருங்கள்.

100 ரூபாய் கையில் இருக்கும் ஒருவருக்கு பொம்மை வாங்கும் போது எத்தனை ரூபாய் திரும்ப கிடைக்கும்? அட்டவணையில் எழுதுங்கள்.

| வாங்கிய பொம்மை | விலை | மீதி கிடைத்தது |
|---|---|---|
| முயல் பொம்மை | 89 ரூபாய் | 11 ரூபாய் |
| குரங்குப் பொம்மை | | |
| வாத்துப் பொம்மை | | |
| பூனைப் பொம்மை | | |

நான் நாளை திருவிழா காண சென்றால் எந்த விளையாட்டுப் பொருள் வாங்க வேண்டும்?



உங்களுக்கு விருப்பமுள்ள ஒரு விளையாட்டுப் பொருளின் படம் வரையுங்கள்.

பாறுவிற்கு நண்பர்கள் வரைந்து கொடுத்த விளையாட்டுப் பொருட்களின் படத்தைப் பாருங்கள்.



கூடுதல் பேர் விரும்பும் விளையாட்டுப் பொருள் எது?

கார் விரும்பும் எத்தனை பேர் உள்ளனர்?

ஒவ்வொரு இனம் விளையாட்டுப் பொருளின் எண்ணிக்கையை பட்டியலில் எழுதுங்கள்.

| விளையாட்டுப் பொருள் | எண்ணிக்கை |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |

ஒரே எண்ணிக்கையுள்ள விளையாட்டுப் பொருட்கள் எவை?

ஒருவர் மட்டும் விரும்பும் விளையாட்டுப் பொருள் எது?

## பலவித பூக்கள்



ஒவ்வொரு இனம் பூக்களும் எத்தனையென கண்டுபிடித்து எழுதுங்கள்.

| பூக்கள் | எண்ணிக்கை |
|---|---|
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |
|  | |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

**51 அ பிரிவுக்கூறு**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்-34, தொலைபேசி : 0471-2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring : www.nireekshana.org.in***